MANIAKARA, STREET.
TRICHINOPOLY.

... எம். ...பிரமணியன்
...ாத்தனூர் (அஞ்சல்)
(சேலம் மாவட்டம்)

போர்வாள்

பெரியார்
அறிக்கை
...
ஆச்சாரியார்
...

...ரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
...ா. இளஞ்செழியன், B. A. (...ons.)

திராவிடர் வார வெளியீடு.

விலை அணா 1½

...ள் 1 | சென்னை 16—8—47 சனிக்கிழமை | வீச்சு 1

...இந் நாள் இந்தியாவில் எங் ...தும் சுதந்தரம் என்பதே பேச்சு! ...ர் யார் வாயிலும் விடுதலைப் ...ன்! பார்க்கும் இடம் எங்கும் ...ாண்டாட்டம்! எக்காளம்!

...ாடியேற்றம்! திரு...ா! ஆமாம், மூன் ...று ஆண்டுகளா... பலப் பல "ஜலி...ாவாலா பாக்" ...ளை நடத்திய ...த ஆணவம் ...த்த பிரிட்டிஷ் ...ாதிபத்தியம் ...ாலைகிறது என் ...ல் யாருக்குத் ...ன் மகிழ்ச்சி ...ாங்காது. அதி... பெரியார் இரா...ாமிகளையும் ... சிதம்பரனார் ...ாயும், திரு. கலியாணசுந்தர...களையும், டாக் ... நாயுடுகளையும் ... ஆண்டுகளுக்கு ...பே ஏகாதிபத் ... எதிர்ப்பு முன் ...ரிக்கு அனுப்...பிக்கொடுத்த திராவிட இனத்தவர்க்கா மகிழ்ச்சி இருக்காது. பிரிட்டானியம் தொலைவதில் பிற இனத்தவரினும் பார்க்க மிக மகிழ்ச்சி உடையவர்கள் அவர்களே. ஆனால் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாத அளவிற்கு வேதனை அவர்கள் உள்ளத்தை வாட்டுகிறது. வடநாட்டு அரசியல் ஏகாதிபத்யம் ஒரு புறமும் டாடா-பிர்லா—டால்மியா—கோயங்கா பொருளாதாரச் சுரண்டல் மறு புறமும் திராவிடத்தை வதைக்கிறது. திராவிடர் கைகளோ இந்துஸ்தான் இருப்புச் சங்கிலியால் இறுகப் பிணிக்கப் பட்டுவிட்டன.

சுதந்தர இந்தியா



சுதந்தர இந்தியாவில் நம் தாயகத்தின் நிலை இது தானே என்று திராவிடர் நெஞ்சம் குமுறுகின்றனர். இந்நிலைமைகளைத்தான் நமது ஓவியர் இப்படத்தில் சித்த... ...துக் காட்டுகி...

...கும் சுதந்தரம் என்பதே பேச்சு; என்றாலும், இருண்ட திராவிட... நிலை மாறவில்லை. ...ரியாக்களும், ராஷ்டிரபதிகளும் திராவிடத்தின்... ...ளுக்குப் பூட்டிட்... ...ரிப்... ...படைகிறார்கள். ஏ திராவிடமே! விழித்...

திராவிடர் தலைவர் அறிக்கை

வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிவிடவில்லை.

இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளித்திருப்பதாய்ச் சொல்லுவதன் மூலம் இந்தியாவின் நிர்வாக அதிகாரத்தை இந்தியருக்கு மாற்றியிருக்கிறார்கள்.

இந்தியர்களில் எல்லாக் கட்சி மக்களிடையேயும் அதிகாரத்தை ஒப்புவிக்காமலும், எல்லோருடைய குறைகளைக் கேட்காமலும், எல்லாக் கட்சியாரையும் சமரசப்படுத்தாமலும், தங்களுக்குப் பல வழிகளிலும் வியாபாரத்திற்கும் பிரிட்டன் நலத்துக்கும் சில இரகசிய ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு காங்கிரஸ்காரரிடம் மாத்திரம், அதாவது, பார்ப்பன ஆதிக்கமும் வடநாட்டார் சுரண்டல் வசதியும் கொண்ட ஒரு சுயநல தந்திர சூழ்ச்சிகொண்ட கோஷ்டியார் கைக்கு, அதிகாரத்தை மாற்றிவிட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு தரும் நிபந்தனையோடு அதிகாரத்தை மாற்றியிருக்கிறார்கள்.

எனவே, குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்பது அதிகாரமாற்றமே தவிர, நாடு ஒப்படைப்பு அல்ல.

உதாரணமாக, இந்தியாவுக்கு அரசர் ஜார்ஜ் மன்னர் ஆவார். மேற்பார்வையாளர், கவர்னர்—ஜெனரல் மேன்மைதங்கிய மவுண்ட் பேட்டன் ஆவார்.

ஆதலால் வெள்ளையருக்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்ட ஒரு ஒப்பந்த ஆட்சிதானே ஒழிய, இந்திய மக்களுக்கு ஏற்பட்ட சுதந்தர ஆட்சியல்ல. இதன் பயனும் இந்த நாட்டிலுள்ள காங்கிரஸல்லாத மக்களுக்கு நன்மையில்லை, பிரதிநிதித்துவம் இல்லை, வர்ணாஸ்ரம தர்மக் கொடுமை ஒழிவதில்லை.

ஏற்படப்போகும் மாகாண ஆட்சி என்பது வெள்ளையர் அதிகார ஆட்சிகாலத்திலிருந்த உரிமையைவிட மோசமான ஆட்சியேயாகும். அதிகாரங்கள் யாவும் மத்திய அரசாங்கத்திற்குத்தான் உண்டு.

சில அதிகாரங்கள்தான் மாகாணங்களுக்கு என்றாலும், அவைகளும் கவர்னருக்கே ஒழிய மந்திரிகளுக்கல்ல.

கவர்னர் தெரிந்தெடுக்கப்பட்டவரானாலும், தெரிந்தெடுக்கப்பட்ட மந்திரிகளுக்குக் கட்டுப்பட்டவரல்ல. மந்திரிகள் வெறும் பொம்மைகள். அதாவது ஆலோசனை சொல்பவர்கள் ஆவார்கள்.

சென்னை மாகாணத்துக்கு 2000 மைல் தூரமான டில்லியில் இருக்கும் "பிரசிடெண்ட்" கையில் சென்னை மாகாண மக்களை நடத்தும் ஆட்சி இருக்கிறது.

[illegible]சிடெண்டும் மத்திய அரசாங்க மந்திரிகளும் அசெம்பளி மெம்[illegible] சேர்ந்த மொத்த கணக்கில் 10-ல் ஒரு பாக எண்ணிக்கைக்[illegible]யான எண்ணிக்கையாளர்தான் அங்கு சென்னை மாகாண[illegible]ய் இருப்பார்கள். அவர்களும் பெரிதும் ஆரிய அடிமை[illegible] இருப்பார்கள்.

[illegible]நாட்டுக்கும் தென்னாட்டுக்[illegible] சமுதாயத் துறையிலும் [illegible]ருளாதாரத் துறையிலும் ஏரா[illegible] [illegible]ன பேதம் உண்டு.

[illegible]யாபாரத்தில் வடநாட்டார் [illegible]ளை இனியும் அதிகப்படுமே ஒ[illegible] சிறிதும் குறையாது.

[illegible]மார்த்தத் துறை என்னும் ம[illegible] கொடுமையால் சமுதாயக் [illegible]மை வடநாட்டார் இஷ்டப்படியின் பெருகுமே தவிர, சமு[illegible] [illegible]—சமத்துவம் ஏற்பட வழி[illegible] [illegible]

இன்று திராவிட நாடு[illegible] கே[illegible]து முக்கியமாய் வடநாட்[illegible] [illegible] பொருளாதார சுரண்ட[illegible] [illegible] [illegible]ரியன் விளைத்த சமுதாய[illegible] இழி[illegible] நீங்கவேண்டும் என்ப[illegible] [illegible] [illegible]வே யாகும்.

அ[illegible]வது, இன்று நைஜாம், திருவ[illegible]ங்கூர், மைசூர் நாடுகள் விரும்புவதுபோல் சென்னை மாகா[illegible] $4\frac{3}{4}$ கோடி திராவிட மக்கள் த[illegible]ளது கலாச்சாரம், பொருளாதா[illegible] முதலியவைகளுக்[illegible] ஏற்ற [illegible] நாடாக இருக்க வேண்[illegible]டுமே.

ஆத[illegible] வெள்ளையர் நம்மை மோச[illegible]த்ததை வெறுக்கவும் கண்டிக்[illegible], அறிகுறியாகவும் காங்கிர[illegible]ன், அதாவது, வடநாட்[illegible] பனியாக்களுடையவும் ஆரிய [illegible]பார்ப்பனர்களுடையவும் சூழ்ச்சி[illegible]தும் ஏமாற்றும் தந்திரத்திற்கும் [illegible]ாம் ஏமாந்துவிடவில்லை என்பதை[illegible]க்காட்டவும் பூரண சுயேச்சை உ[illegible]ள் திராவிட நாடுதான் நமது லட்[illegible]சியமே தவிர அதற்குக் குறைந்[illegible] எதைக்கொண்டும் நாம் திருப்திய[illegible]டையமாட்டோம் ஓய[illegible]மாட்டோம், கிளர்ச்சி செய்தே தீருவோம் என்பதைக் காட்டவும் இம் மாதம் 15-ந் தேதி நடக்கும் சுதந்திர[illegible] திருநாள் என்னும் ஆரியர்—[illegible]னியா ஏமாற்றும் திரு விழாவில் நாம் கலந்து கொள்வதில்லை என்கிறோம்.

அண்ணா பேசுகிறார்!

சுயமரியாதை இயக்கத்தின் வெற்றிகள் நம் கண்முன்னால் தாண்டவமாடுகின்ற இந்தக் காலத்தில் கூட சூனாமானா! என்ன சாதித்து விட்டான் அவன் என்று கேட்பவர்கள் இல்லாமல் இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு 10 ஆண்டுகளுக்குமுன் அண்ணா கூறிய பதில் இது.

இலட்சியங்களை சடுதியில்
டைவதென்பது எந்த இயக்கத்
லும் சுலபமான காரியமல்ல.
திலும் நமது இயக்க இலட்சி
ங்களோ வெனில், பல ஆண்டு
ர் போர் புரியினும், (மேலும்
மேலும் போர்க்களமே நமது கண்
ன் தெரியும்படியான நிலைமை
பத் தரவல்லது. தேர்தலுக்கு
று மாதங்களுக்கு முன்பு ஆரம்
ந்து வெற்றியோ தோல்வியோ
டைந்து, வெற்றி கண்டால்
னந்தத் தாண்டவ மாடுவதும்,
தால்வி நேரிடின் கொட்டாவி
ட்டு தூங்கப் போவதும், அரசி
் கட்சிகளின் இலட்சணமாக
ருக்கிறது. நமது இயக்கமோ
மக மாற்றத்தையே குறியாகக்
ாண்டது. சமூகத்தின் நிலை
ய மாற்றக்கூடிய நிகழ்ச்சிகள்
த நேரிடினும், அது எக்கார
ம் பற்றி நடப்பினும், அதனை
ாளிக்க வேண்டியவர்கள் நாம்.
றைய எந்த இந்திய இயக்க
ம், கொண்டிராத இலட்சியத்
நாம் கொண்டுள்ளோம்.

ும், மனித சமுதாயத்திலே,
வம், சகோதரத்வம், விடு
நிலவ வேண்டுமென ஆசைப்
றோம். பல நூற்றாண்டுகளாக
நாட்டிலே இந்நிலை இல்லை
பதைச் சரித்திரங் கூறுகிறது
ள் சமத்வம், சகோதரத்வம்,
லை பெறுவதென்பது சுலபத்
ல தீர்ந்துவிடக்கூடிய தன்று.
த இலட்சியங்களின் சாயல்க
பெறுவதற்கு, ஐரோப்பிய
களில், புரட்சிகள் நடந்து
த்த ஆறுகள் ஓடி இருக்கின்

க்களிடை. சமத்வம் நிலவுவ
ன்றால், அதைத் தடைப்படுத்
ம் கொள்கைகள் அழிக்கப்பட
ண்டும். அந்தக் கொள்கை

களைக் கொண்ட இயக்கங்களுடன் போரிடத்தான் வேண்டும். அந்தப் போரின் அவசியத்தை மக்களிடை எடுத்துக்கூறி, அதில் ஈடுபடக் கூடிய அளவு பக்குவம், பலம், இவைகளைப் பெறும்படியாக, மக்கள் தயார் செய்யப்படவேண்டும். சுருங்கக் கூறின், அறிவுப்படை அணிவகுப்பு, நமது முதற் பணி. அதில் நாம் ஓரளவிற்கு வெற்றி பெற்றுவிட்டோம். நாம் கண்ட வெற்றிக்குப் பிறகு, அது நமக்கு சர்வ சாதாரணமாகத் தோற்றக் கூடும், அலட்சியமாகவும் அதை நோக்கக்கூடும். ஆனால் புராதனத்தையே புனிதமெனக் கருதும் இந்நாட்டிலே, புதிய அறிவுப் படை திரட்டப்படுவதென்றால் அது ஒரு ஒப்பற்ற வெற்றி என்பதை யார் மறுக்க முடியும்?

நமது சு.ம. இயக்கம் தோன்று முன்பு நம் நாட்டிலே எத்தனையோ இயக்கங்கள், கிளர்ச்சிகள், கட்சிகள் இருந்து வந்தன. அவைகளிற் பல மாண்டன. சில உரு மாறி விட்டன. மற்றும் சில நாதனற்றுப் போய்விட்டன. நம் நாட்டிலே தோன்றிய கிளர்ச்சிகளிலே சில அரசியல் நோக்குடையன. வேறு பல, மத, சமுதாய சீர்திருத்தக்குறி கொண்டனவாகும். ஆனால், எந்த இயக்கமும், அரசியலது அன்றி சமுதாயத் துறையினது ஆயினும், அவைகளிடை ஒரு பொது நோக்கங் காணக்கிடக்கும். அது என்னெனில், பழமையில் ஆர்வம்.

அரசியலிலே பெரும்பங்கெடுத்துக்கொண்ட் பெசண்டு இயக்கம், புராதன இந்திய சிறப்பையும், புராதன வாழ்க்கையின் மேன்மையையுமே போதித்து வந்தது. புராதன மேன்மை, எனின், அது ஆரிய மேன்மை என்பதில் ஐயமில்லை. ஆரிய மேன்மையின் உச்சி, வர்ணாச்சிரமம். கொள்கை இதுவாயின், இந்த இயக்கத் தலைவியாரோ, "தேவியின் அம்சம்" "லோகமாதா" என்று கொண்டாடப் பட்டது குறிப்பிடத்தக்கது. அதனுடைய வேலைத்திட்டத்திலும் பெரிதும் மதச் சடங்குகளே நிலவிற்று. கடைசியில, அரசியல் காரியம் ஓய்ந்து பெசண்டின் இயக்கம் கதம்பமத இயக்கமாகவே மாறிவிட்டது. அதே நிலைக்குத்தான் காங்கிரசும் வந்து கொண்டிருக்கிறது.

சமுதாய சீர்திருத்தங்களுக்கெனத் தோன்றிய சமாஜங்கள் கூட்டங்கள், யாவும், பெரிதும் மதப்பற்றையே தலையாகக் கொண்டிருந்தன. மதப் போர்வை இருந்ததால், மக்கள் தாராளமாக, தங்கு தடையின்றி, அவ் வியக்கங்களில் சேரும், அவைகளிலே மட்டற்ற நம்பிக்கை வைக்கவும் ஏதுவாயிற்று. ஆனால் பரந்து விளங்கிய அவ் வியக்கங்கள், சமுதாயத்திலே, பிரமாதமான மாறுதலைச் செய்து காட்டவில்லை. ஏனெனில், பெரிய மாறுதல்களிலே மக்களுக்கு ஆர்வம் எழும வகையிலே, அறிவுச் சுடர் புகவில்லை.

மதத்திலே லயித்துள்ள எந்த இயக்கத்தாலும் மனமாற்றத்தை, மனப் புரட்சியை உண்டாக்க முடியாது. புதிய தத்துவார்த்தங்கள், புதிய குருக்கள், விருத்தியுரைகள் ஏற்படலாம். ஏதாவதொரு, மதத்திற்கு சற்றே முரணான திட்டம் ஏற்படினும் அதற்காக, ஏதேனும் ஒரு பழம் ஏட்டை எடுத்து, புதிய அர்த்தம சொல்லவேண்டி வந்ததே தவிர, சமூகக் கோளாறுகளை ஒழிக்க, முதலில் கோளாறுகளின் காரணங்களை, பட்டவர்த்தனமாக எடுத்துக் கூறும் விதத்திலே அந்த இயக்கங்கள் வரவில்லை.

[இந்நிலையில்தான், நமது இயக்கம் தோன்றி, சமூகக் கோளாறுகள் எழும்பியவிதத்தை வலியுறுத்தி, மதத்தின் பேரால் மக்கள் வஞ்சிக்கப்படுவதையும், புராணத்தின் ஆதரவால் மூடச

சடங்குகள் பழக்க வழக்கங்கள் மக்களின் உடல், பொருள், ஆவியை உறுஞ்சுவதையும், வர்ணாச்சிரமக் கொடுமையால் ஜாதிப் பாகுபாடும் சமூகக் கொடுங்கோன்மையும் உண்டானதையும், இவைகளின் காரணமாக, ஆரிய வகுப்பினராகிய பிராமணர் எனும் சமூகம், மதத்திலே தரகர்களாகவும், கல்வியிலே ஞானாசிரியர்களாகவும் சமுதாயத்திலே, உயர்ந்தோராகவும், அரசியலிலே, ஆக்கவும் அழிக்கவும் வல்லவர்களாகவும் இருப்பதையும், பிராமணீய ஒழிப்புதான், சமுதாய சமத்துவத்திற்கு முதற்படி என்பதையும், சமூகம் புதுப்பிக்கப்பட வேண்டுமானால், இந்தப் 'பழமை' அழிக்கப்பட வேண்டுமென்பதையும், அச்சம், தயை, தாட்சணியமின்றி எடுத்துக் காட்டிற்று. இதுவே தமிழ் நாட்டில் ஏற்பட்ட முதல் மனப்புரட்சி.

ஆகவே தான் நாம் பகுத்தறிவையே ஆயுதமாகக்கொண்டு, இந்திய மத ஏகாதிபத்தியத்துடன் கடினமான போர் துவக்கினோம். நமது எதிரிகள், புராணங்களையும், பழைய பழக்க வழக்கங்களையும் ஆயுதங்களாகக் கொண்டு நம்மைத் தாக்கினர்.

நாம் மக்கள் சமூக வாழ்வில் ஒருவருக் கொருவர் எவ்வித உயர்வும் தாழ்வும் இருக்கக் கூடாது என்றோம்.

அவர்கள் "உயர்வு தாழ்வு" மத சாஸ்திர புராண இதிகாச ஆதாரம் பெற்று, நெடுநாட்களாக இந்த நாட்டிலே நிலவி சக்கரவர்த்திகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டு, காப்பாற்றப்பட்டு வந்தது என்றனர்.

அறிவு, ஆராய்ச்சி, அனுபவம், இவைகளையே உறுதுணையாகக் கொண்டு சமூகவாழ்வை நடத்த வேண்டுமென்று நாம் கூறினோம்.

மனு சொன்னபடி நடப்பதே மதக்கட்டளை என்றனர் அவர்கள்.

நாம் அடிமைப் பான்மையையும், வகுப்பு ஏதேச்சாதிகாரத்தை வளர்க்கும் சாஸ்திரக் கொடுமையையும் விளக்கினோம். சமதர்மத்தைப் போதித்தோம்; வாலிப உலகம் பூரிப்படைந்தது.

நாம் இப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டதால், மக்கள் மனதில், அதிலும் இளைஞர்கள் மனதில் நமது இயக்கம் நன்கு பதிந்து விட்டது. எனவே எவ்வளவு தீவிரமான கொள்கையாக இருப்பினும் அதை வரவேற்க ஆரம்பித்துவிட்டது வாலிப உலகம்.

அவரும் எண்ணினார்?

"யான் இளைஞனாயிருந்த போது சாமியார் உள்ள இடங்களெல்லாம் என்னைக் கூப்பிடும். பல இடங்களில் உழன்றேன்; சுழன்றேன். சாமியார் உலகம் எனக்கு வெட்ட வெளிச்சமாயிற்று. ஞானிகளென்றும், அவதூதரென்றும், துறவோரென்றும், ஆச்சாரியரென்றும், மடாதிபதிகளென்றும் திரிவோருள் பலர் அந்தரங்கத்தில் பெண்களுடன் கலப்புக் கொண்டிருந்ததை சில நாளில் உணருமாறு ஆண்டவன் அருள் எனக்குத் துணை புரிந்தது. "இந்தப் பாவிகள் வெளிப்படையாகப் பெண்களுடன் வாழ்தலாகாதா?" என்று எனது நெஞ்சம் எண்ணும்."

இந்த வாசகங்கள் பெரியார் இராமசாமியின் பேச்சுத் தொகுப்-
பினின்று எடுக்கப்பட்டன அவ
அவருடைய அருமை நண்பர் (ஏ
நமக்கெல்லாம்கூட நண்பர் தா
—திரு. வி. க. வின் வாழ்க்
குறிப்பில் காணப்படுவன. பெரி
ரைப் போலவே அவரும் எண்
ணினார்; மடாதிபதிகளின் மமதைவ
வைப் பற்றி எண்ணினார்; போ
துறவிகளின் இரகசிய லீலை
பற்றி எண்ணினார்; அந்த இ
சியத் திரையைக் கிழித்தெறி
விட்டு ஊராருக்கு உண்மைய
உவைக்க வேண்டியதின் அவசி
தைப் பற்றி எண்ணினார்; எண்
யது மட்டுமா, தன்னுடைய வா
கைக் குறிப்பிலே அந்த எண்ண
தை எழுத்தில இறக்கியும் இ
கிறார். இருந்து.......? சுய
யாதை இயக்கம் இத்தகைய ச
தாயக் கொடுமைகளைச் சூறைய
வதற்குத் திட்டம் தீட்டியபோ
திரு. வி. க. பெரியாருடன் கூட்
பணி ஆற்றினாரா? கிடையாது.
மரியாதை இயக்கத்தை வள
தாரா? இல்லை—அதன் மீது க
கல் வீசினார்.

எண்ணினார்; எண்ணத்
செயலிற் கொண்டுவரத் தவறி
தவறியது மட்டுமா செய
கொண்டுவரத் துணிந்தவர்க
தாக்கினார்; உரமாகத் தாக்கி
மிக உரமாகத் தாக்கினார்.
தாக்குதல் அவர்க்கொரு தெ
டாகவும் தோன்றியது.

காரணம் என்ன என்று
வி. க. வைக் கேட்காதீர்கள்.
டால் எல்லாம் ஆண்டவன் அ
என்று சொல்லிவிடுவார்!

தோழன்

திராவிடர் மாத வெளியீ

★

ஆசிரியர்:

ஏ. பி. ஜனார்த்தனம், எம். ஏ.

விவரங்களுக்கு:

10, வேளாளர் தெரு, புரசைவாக்கம்,

சென்னை.

ஆச்சாரியார் வியாக்யானம்

"சாக்ரடீஸ்"

உங்களுக்குத்தான் தெரியுமே ன்னுள் முதலமைச்சர் ஆச்சாரி ர் குட்டிக்கதை கூறுவதில் வல்லு என்பது! அவர் அரை மணி ரம் பேசினாலும் சரி, ஐந்தே ாடி பேசினாலும் சரி, சின்ன ன கதைகளை—சொருசான தைகளைச் சொல்லாமல் இருப்ப லை சட்டசபையில் அவர் பட் ட்சமர்ப்பிக்கும் போதும் அவ ம் கதைபிறக்கும்; மக்கள் ாபம் அவர்மீது பாய்கிறபோதும் த பிறக்கும். "கல்கி" பத்திரி யில் அவர் தீட்டும் வியாசர் ந்திலும் குட்டிக் கதை நடமா ; 'கண்ணன் காட்டிய வழி' அவர் நமக்கெடுத்துக் கூறும் லிலும் கதை நடமாடும். குட் கதை கூறும் ஆற்றல் அவரு ன பிறந்து வளர்ந்த பண்பு ாலும்! சின்ன சின்ன கதை ள இடை இடையே செருகி த்து, உபமான உபமேயங்களை ங்கங்கே ஓட்டவைத்து அவர் சுகிற தோரணை இருக்கிறதே, து ஆளை அப்படியே மயங்க த்துவிடும். அவரை ஒரு குட்டிக் த நிபுணர் என்றே சொல்லி லாம். அவ்வளவு சுவையா வை அவருடைய குட்டிக் கதை . சுவையானவை மட்டுமா, லானவைகூட; சில சமயங் ல் அவருக்குத் தொல்லை தரு ன கூட!

அடே அப்பா! இந்தி எதிர்ப்புப் ராட்டத்தின்போது போலீசார் டசூழ அவர் பவனி வந்தாரே, தக் காலத்தில் அவர் எவ்வளவு டிக் கதைகளை எடுத்து வீசினார்! கிற இடமெங்கும் கறுப்புக் ாடி கண்டார்; எங்கள் தமி கா ஆபத்து என்று துடிதுடிக் இளங்காளைகளைக் கண்டார்; வந்த இந்திப் பெண்ணே கேள்- தேடிவந்த கோழையுள்ள நாடு ல்லவே என்று பண்பாடும் ருவீரர்களைக் கண்டார்; சிறைச் சொல்லி சீறிப் போரிடும் சிங்க ஏறுகளைக் கண்டார். உள்ளத் திலே மிரட்சி கொண்டார். அதை வெளிக்குக் காட்டிக் கொள்ள முடி யாதல்லவா! காட்டிக் கொண்டால் முதலமைச்சருக்கு முடுக்கு இல்லை என்று பிற அமைச்சர்கள் தூற்ற மாட்டார்களா! எனவேதான் உப மான உபமேயங்களை போகிற இட மெங்கும் அள்ளித் தெளித்தார். அலைகடலென மூண்டெழுந்த எதிர்ப்பை குட்டிக் கதைகளெனும் குறுந்தடி கொண்டு அடக்கி ஒடுக்கி விடலாம் என்று அவர் எண்ணி னார். ஆனால் அவர் கதைகளை எடுத்து வீச வீச மக்கள் உள்ளத் தில் அமைந்து கிடந்த எதிர்ப் புணர்ச்சி பெரும் புயலென வளர்ந் தது. புரட்சி வாடையும் வீசத் தொடங்கிற்று. தமிழ்நாடே குமுறி எழுந்தது; கொதித்தது; கொந் தளித்தது.

தமிழர் உள்ளமோ அந்நாளில் வெடிமருந்துக் கிடங்கென இருந் தது. ஆச்சாரியார் கட்டாய இந்தி எனும் தீப்பொறியை அதன்மீது வீசினார்! அவ்வளவுதான், கிடங்கு குபீரென தீப்பற்றிக் கொண்டது! தீ பரவிற்று—தமிழ் நாடு முழுதும் பரவிற்று வெகு வேகமாகப் பர விற்று. தன்னுடைய உபமான உபமேயங்களைக் கொண்டு சுழன்று சுழன்றுவீசிய நெருப்பு ஜ்வாலையை அழித்துவிட அவர் முனைந்தார். ஆனால் அவருடைய உபமான உப மேயங்களோ தீச்சுழலை மேலும் மேலும் பரவிடச் செய்யும் மண் ணெண்ணெயாக மாறின. குட் டிக் கதைகளை அவர் நெருப்பணைக் கும் இயந்திரங்கள் என எண்ணி னார். அவைகளோ சுழன்றடிக்கும் தீச்சுழலை சூறுவளிச் சுழலாக மாற் றின. எதிர்ப்பு அடங்கவில்லை. புகையோ குறையவில்லை. மக்க ளிடையே மூண்டெழுந்த அதிர்ப் தியும் அதன்விளைவான ஆவேசமும் மறையவில்லை. குட்டிக் கதை சொல் குட்டிக்கதை வலுக்கவலுக்க தமிழர் உள்ளக் கொதிப்பு பெருகிற்று அது பெருகப் பெருக அவருடைய கதைகளும் வளர்ந்து பெருகின. இது அதை வளர்த்தது. அது இதை வளர்த்தது. ஆகக்கூடி இரண்டும் வளர்ந்தன.

ஒருநாள், "நான் கண்ணாடி வியா பாரி! தயவுசெய்து கல் வீசாதீர் கள்! என் கண்ணாடிப் பாத்திரங்கள் உடைந்து போகும்" என்று "கெஞ்சல் மொழி" பேசினார் அவ ருடைய ஆட்சிப் போக்கில் கோளா றுகள் உள்ளன என்று சொன்ன வர்களைப் பார்த்து. ஆனால் எதிர்ப்பு அடங்கவில்லை, மாறாக வளர்ந்தது. கோளாறுகளை அப்படியேவைத்துக் கொண்டு குழைவு மொழிகளைச் சொன்னால் மட்டும் எதிர்ப்பு நின்று விடுமா? நிற்காது என்பதுதான் அரசியல் அரிச்சுவடி ஆயிற்றே!

கண்ணாடிப் பாத்திரத்தைக் கல் தரையில் வைத்ததுபோல் மிகத் தளுக்காக அமைந்த தப்பா என் ஆட்சிமுறை! அப்படி இப்படி அதை அசைத்துவிட்டால் அது சுக்கல் சுக்கலாய் உடைந்துவிடும் என்றுதான் அவர் சொன்னார். அவர் அப்படிச் சொன்னதற்கே காரணம் அரசாங்கம் மிக ஆபத் தான அடிப்படைமீது எழுப்பப் பட்டிருக்கிறது என்பதை மக்களுக் குத் தெரிவித்து விட்டால் அவர் கள் அரசாங்கத்தைத் தாக்குவதை நிறுத்தி விடுவார்கள் என்பது. ஆனால் அவர்எண்ணியதற்கு மாறாக மக்கள் தாக்குதலின் வேகத்தை அதிகப்படுத்தினர். முன்னேயாவது மக்கள் அஞ்சியிருந்தனர் ஆட்சி யின்பலத்தை அறிய முடியாததால். இப்போதுதான் அதுபலமற்றது— உளுத்துப்போனது-கல்கலத்த கட் டிடம்போல சடசடெனச் சரியக் கூடியது என்பதை ஆச்சாரியாரே அவர்களுக்குத் தெரிவித்து விட்

(தொடர்ச்சி

மனிதா! நீ யாருக்கும் தலை வணங்காதே; நிமிர்ந்து நட; கைவீசிச் செல். எதற்கும் அஞ்சாதே! ஆற்றலுள்ள வெற்றி வீரனென விளங்கு. செல்வச் செருக்கரை, கொடுங்கோல் அரக்கரை, மத வெறியரை ஒதுக்கித் தள்ளி மனச்சாட்சியைத் துணைகொண்டு நட. எதையும் சிந்தித்துப் பார்! யாருக்கும் நீ தாழ்ந்தவன் அல்லன்! எவருக்கும் அடிமை அல்லன்! நீயே தலைவன்! தலைநிமிர்ந்திடு!

வால்ட் விட்மன்.

16—8—47 சனிக்கிழமை

போர்வாள் புறப்படுகிறது!

இன்பத் திராவிடம் தனது போர்ப் பாதையை அமைத்துக்கொண்டிருக்கும் பொன்னான நேரத்தில் "போர்வாள்" வருகிறது. தமிழர்களைக் காண! கண்டு கை குலுக்க!

நாம் தமிழகத்திற்குத் தரும் "போர்வாள்" அலங்காரத்திற்காக உருக்கி வார்க்கப்பட்ட தங்க வாள் அல்ல. ஊரை — உலகை ஆட்டிப் படைக்கும் உல்லாசச் சீமான்களின் இடுப்புப் பட்டையில் தொங்குவதற்காகத் தீட்டப்பட்ட வயிர வாளும் அல்ல. ஆயிரம் உண்டிங்கு சாதி என்று பாசுரம் பாடிக்கொண்டு, அந்த சாதி வேறுபாட்டை நிலை நாட்டும் வர்ணாஸ்ரம தர்மத்தையும் அதற்கு ஆதாரமான இந்து மதத்தையும் "மாபாவி" களிடமிருந்து காப்பாற்றுவதற்காகக் கொதிக்கும் கண்களும் கொந்தளிக்கும் உள்ளமும் உடையராய் "உலா" வருகின்ற பத்தாம் பசலிகளின் கையிருப்பு வாளும் அல்ல. நறுமண நெய் தடவி, அழகுத்தை மாணிக்கத்தை வைடூரியத்தை அங்கங்கே பொருத்தி வைத்து பளீர் பளீர் என்று மின்னும் படியாக "மன்னாதி மன்னர்கள்" பட்டாடை மீது தவழுமே அத்தகைய வாளும் அல்ல. வெளிப்படையாகவே சொல்லி விடுகிறோம் அழகுக்கோ அலங்காரத்திற்கோ பிறர் பார்த்து மெச்சுதற்கோ பலரது கண் பார்வையைக் கவர்வதற்கோ ஏற்ற வாள் அல்ல, 'இன்பத் திராவிடமே இந்தா' என்று இந்நாள் நாம் தரும் இப் "போர்வாள்". நமது "போர்வாள்" போர்வாளே தான். இழந்த விடுதலையைத் திரும்பப் பெற வேண்டும் என்று உறுதி செய்துகொண்டு, "பெற்றால் திராவிடநாடு. இல்லையேல் இடுகாடு" என்று சூள் உரைத்துவிட்டு வீரம் ததும்பும் நெஞ்சமும் தமிழ்க் கனல் கக்கும் கண்களும் உடையராய் அதோ திராவிடர் பாசறையில் நிரல் நிரலே அணிவகுத்து நிற்கும் அந்த ஆயிரமாயிரம் இளங் காளைகளின் கரங்களில் நேரே சென்று

சேரன் செங்குட்டுவ
பரம்பரையினர் அவர்க
அவர்கள் எதிர்த்து நிற்
தோ கனக விசயர் பரம்
ரையை. எனவே வெற்
இறுதியில் எந்தப் பட்ட
ளத்தை மேவும் என்று செ
ல்வதற்கு ஆருடம் பார்க்க
தேவையில்லை. தடைக் க
கள் எத்தனைதான் அவர்
ளுடைய போர்ப் பாதையி
கிடத்தப் படட்டுமே அவர்
ளுடைய வீர உள்ளம் அத்
னையையும் தாண்டிக்கொ
ண்டு வெற்றி முரசு கொ
டத்தான் போகிறது. அ
நாம் காணத்தான் போ
றோம், ஆனால் வெற்றிபுரிக்
அவர்கள் செல்லு முன்
கடும்போர் புரிந்தாகவேண்
டும். சமர்க்களத்தில் எதி
களின் கோட்டத்திலிருந்
பிறக்கும் நேர் முகத் தாக்
தல்களை மட்டுமல்ல—அவ
றைச் சமாளிப்பது அ
தமிழ் வீரர்களுக்கு எளி
ஆனால் அவற்றைவிட மி
முக்கியமான, சூழ்ச்சி நிறை
ந்த, நேரிய வழியில் வீரர்க
வீழ்த்த முடியாத போ
பரம்பரை பரம்பரையா
ஆரிய இனத்தவர் கைய
ண்டு வருகின்ற—மறைமுக
தாக்குதல்களையும் சமாளி
தாக வேண்டும். நாம் மற
க்கவில்லை, மறக்கவுமில்லை
அந்தத் தமிழ் வீரர் கூட்ட
தங்கள் தாய்த் திரு நாட்டை
காப்பதற்காகத் தொடுத்
நடத்தவேண்டிய போர் மி
மிகக் கடுமையானதாய்
தான் இருக்கும். இறுதி வெ
ற்றி அவர்களுக்கே எ
பதை நாம் எவ்வளவு உறு
யாய்ச் சொல்ல முடியுமே
அதைவிட அதிகமா
உறுதி நமக்குண்டு இனி ந
க்கவிருக்கும் போர் பலம
னது தான் என் பதில்.

ஆம்! வர இருக்கும் போ
ராட்டம் பலமானது தான்
அந்தப் பலமான போரா

...க்கம் நின்று அவர்களுக்கு ...ற்சாக மூட்டி, அவர்களு ...டைய உள்ளுணர்ச்சியைத் ...ட்டியெழுப்பி, கங்கை ...கொண்ட இராசேந்திரன் ...ட்டத்தவர் நீங்கள் என் ...தை எடுத்துக் காட்டி, பர் ...ரவில் புலி பொறித்த பெரு ...க்கள் நீங்கள் என்னும் ...ண்மையை நன்கறியச் ...செய்து, ஈழத்தில் கொடி ...ட்டிய பராந்தகன் பின்ன ...ர் நீவிர் என்பதையும் சொ ...லிக்காட்டி, இமயத்தில் ...ன் இலச்சினையிட்ட திருமா ...ளவன் அவர்களுடைய ...ன்னவனே என்பதையும் ...னைப்பூட்டி, "ஆரியப்படை ...ந்த நெடுஞ்செழியன்" ...ன்னும் சங்க கால மன்ன ...னை அவர்களுடைய உள் ...த்திற்கு அழைத்துவந்து, ...சாழ வேந்தர் தம் கடற் ...டையும் பாண்டியர் பண் ...டும் சேரன் சிறப்பும் ...றைந்துபோன மாயத்தை ...ம் இடைநடுவே சொல்லி ...வத்து, அவ் வீரர்களுக்கு ...ற்ற படைக்கலமாய் விளங் ...ம் நம் வாள்.

...போர்வாள், தமிழருடைய ...பாராட்டத்தின் போது ...மிழ்ச் சூழலில் தடுக்கி வீழ் ...வரை எடுத்து நிறுத்தும்; ...லுத்துச் சாய்ந்தவர் தம் ...ளப்பை மாற்றும்; ஒடிந்து ...பான உள்ளங்களை இணைத் ...க் காட்டும்; ஓயாத தொல் ...யிடைத் தீராத இன்பம் ...டும்; போராட்டத்தின் ...யாது தமிழர்களுக்குச் சலி ...த் தட்டுவதுண்டாயின் ...நானூற்றைப் புரட்டிக் ...ட்டும். குலையும் அணி ...ருப்புகளையும் நேர் பெற ...றுத்தும்.

...ஞ்ஞான்றும் போர்வாள் ...ர்மையின் பக்கமே இருக் ...ம். நியாயத்தின் வெற் ...க்கே போராடும், திராவி ...தம் பண்பாட்டைப் பழு ...வண்ணம் போராடும்.

கால நிலைமைக்கு ஏற்பப் புதுக்கவும் அது சிறிதும் அஞ்சாது. ஆணவம் எங் கெங்கே கொடிகட்டி வாழ் கிறதோ, அநீதி எந்தெந்த இடத்தில் அரசாள்கிறதோ, அக்கிரமம் யார் யார் இடத் தில் என்னென்ன உருவத் தில் உலாவுகிறதோ அங் கெல்லாம் சென்று சென்று போர்வாள் அறப்பணி ஆற் றும்.

நமது வாள், புற்றில் வாழ் அரவுக்கஞ்சாது; பொய்யர் தம் மெய்யுக் கஞ்சாது; விற் றெழில் வேந்தர்க் கஞ்சாது; விறல்மிகு சேனைக்கும் அஞ் சாது; ஆளவந்தார்களின் கோபப் பார்வைக்கோ அதி கார பீடத்தின் இமையா நாட் டத்திற்கோ சிறிதும் அஞ் சாது; மேட்டுக்குடி மக்க ளின் முறைப்புக்கும் முணு முணுப்புக்கும் கொஞ்சமும் அஞ்சாது; சடங்கு சம்பிர தாயம் என்னும் கோட்டை கொத்தளங்களிலிருந்து பிற க்கும் அதிர் வேட்டுகளுக்கோ அது தினையளவும் அஞ்சாது ஆனல் பற்றில்லா ஏழைக் கண்ணீர் பார்க்கவோ அது அஞ்சி நடுங்கும், ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்பதை அது நன்கு உணர்ந்த கார ணத்தால்.

சுயமரியாதைச் சண்ட மாருதம் எனத் தகும் "**குடி அரசு**" இதனை 24 ஆண்டுக ளுக்கு முன்னல் துவக்கி வைத்த போது அஞ்சாத நெஞ்சு படைத்த அந்த அட லேறு **பெரியார் இராமசாமி** குறிப் பிட்ட அதே வாக்கியங்களில் சொல்வதானல் "போர் வாள்" எவருடைய தயவுக் கோ சுயநல வாழ்விற்கோ கீர்த்திக்கோ நடைபெற வில்லை. யோக்கியமாய் உண் மையாய் நடக்கக்கூடிய காலம் வரை அது நடக்கும்; அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை இல்லையானல் எப்போதாவது எந்தக் கார ணத்தாலாவது நியாயத் தைக் கூற முடியாத நிலை ஏற்பட்டால், அது தானே மறைந்துபோகுமே அல்லா மல் மானங்கெட்ட சில விலங் குகளைப் போல் கோழை வாழ்வு வாழ ஒருக்காலும் ஒப்புக் கொள்ளாது.

உண்மையை ஒளிக்காது எடுத்துச் சொல்லுவதே நமது இலட்சியம்; அது யாரு க்கு எவ்வளவு குமட்டலாய் இருந்தாலும் சரி அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. உள்ளொன்று வைத்துப்புற மொன்று பேசுதல், இரட் டுற மொழிதல், ஒன்றுக் கொன்று நேர் முரணை எட் டுக் கருத்தை உள்ளமைத்து சொற்றொடர்கள் தீட்டுதல், அதுவும் சரி இதுவும் சரி எல்லாம் சரி என்று வேதா ந்த வெற்றுரையாடுதல் முத லிய வழிகள் நமக்குத் தெரி யா. அவை நமக்குத் தெரிய வேண்டிய தேவையுமில்லை. நெஞ்சில் பட்டதைப் பட் டாங்கு உரைக்கும் நேரிய வழி ஒன்றுதான் நமக்குத் தெரியும். அது ஒன்றே போதும். புத்துலகப் பாதை யில் தமிழகத்தைச் செலுத் தும் சீரிய பணியை மேற் போட்டுக் கொண்டுள்ள நமக்கு வேறு வழி ஏனோ?

இறுதியாகஒரே வார்த்தை. அருமைத் தமிழகத்தின்— இன்பத் திராவிடத்தின்— நாம் பிறந்த பொன்னாட்டின் நலத்திற்குக் கேடு சூழ்வார் யாவரே ஆயினும் — அவர் நமக்குப் பகைவராயினும் சரியே அன்றி நண்பராயி னும் சரியே — அவர்தம் சொல்லும் செயலும் போர் வாளால் அச்சம் தயை தாட் சண்ணியமின்றி வெறுத்து ஒதுக்கப்படும்.

"எவ்வளவு நியாயமான இலட்சியத்தை அடைய வேண்டுமானாலும் அதற்காகக் கஷ்ட நஷ்டமடைதல் என்னும் விலை கொடுத்துத் தான் தீர வேண்டும்"—இது வைக்கம் வீரரின் உள்ளம்.

"திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியம் ஒன்றுதான் நம்மை சுதந்தரத்திற்கு—முழு சுயேச்சைக்கு-பரிபூரண விடுதலைக்குக் கொண்டு போய்விடும்."

—இதுவும் தலைவர் பெரியாரின் கருத்து.

நம் போர்வாளின் இலட்சியங்கள் அத்தனையும் இந்த இரு வாசகங்களில் புதைந்து கிடக்கின்றன. இவ் வாசகங்களே போர்வாளுக்கு வழி காட்டிகள். போர்வாளுக்கு மட்டுமா—இல்லை—திராவிட நல் திரு நாட்டிற்கே வழி காட்டிகள்.

தமிழர்களே! உங்கள் கரங்களில் தவழ்ந்து விளையாட இதோ வருகிறது "போர்வாள்." எடுத்துக் கொள்ளுங்கள். வீரர் கையில் விளங்கத் தானே வாள் இருக்கிறது!

ஆச்சாரியார் வியாக்கியானம்

(5-ஆம் பக்கம் தொடர்ச்சி)

டாரே! ஆட்சியின் மூலபலத்தை எடை போடுவதற்குத் துலாக் கோலின்றித் தவித்தனர் மக்கள்; இப்போது முதலமைச்சரே துலாக் கோலைத் தந்துவிட்டார். ஆச்சாரியார் மந்திரி சபை என்ன இலேசானதா! "முன்பொருநாள் பெரியாரின் சிஷ்யராய் விளங்கிய டாக்டர் சுப்பராயனே கல்வி மந்திரி! சுயமரியாதை மூளை என்று திரு. வி. க. வால் பட்டம் சூட்டப்பட்ட மாஜி "சூனமானா" எஸ் இராமநாதனே விளம்பர அமைச்சர்! அன்றொருநாள் தன் னைப் பிரச்சாரப் அபேட்சகர் [illegible]

சபையில் தக்க இடத்தில் நிறுத்தி விட்டார்! பலே கைகாரர் அப்பா இந்த ஆச்சாரியார்!" என்று மக்கள் மன்றம் அவருடைய திறமையை எண்ணி வியந்து கொண்டிருந்த நேரத்தில் அந்த மகத்தான பலம்பொருந்திய முதல் அமைச்சரே சொல்லி விட்டார் என் ஆட்சி கண்ணாடி டம்ளரென்று!

அவர் தன் சுட்டு விரலை ஆட்டினால் சட்டசபை காங்கிரசே உடன் ஆடுகிறது! எம். எல். ஏ. க்களோ 'ஆச்சாரியார் திருவடிகளே சரணம்' என்ற மூலமந்திரத்தை உச்சரிப்பதன்றி வேறு அறியார்! பத்திரிகைகள் ஒவ்வொன்றுமோ அவருக்கு ஒவ்வொரு வஜ்ராயுதம். எப்படியப்பா எதிர்ப்பது இந்த மகா புருஷரை என்று முன்பு திகைத்தது தமிழ்ச் சமுதாயம். இப்போதோ, இது ஜப்பான் வீடு-சிறிய பூகம்பமே இதைக் கவிழ்த்து விடும் என்பதைத் தெரிந்து கொண்டனர்.

தெரிந்து கொண்டனர்; எனவே தம் சக்தியின் அளவை உணர்ந்து கொண்டனர்; முன்னிலும் பலமாக அதிர்வேட்டை எழுப்பத் தொடங்கினர். ஆம், தம் உள்ளத் துடிப்பை உணர்த்த முந்தினர்.

எதிர்ப்பு வளரக் கண்ட ஆச்சாரியார் முதலில் திகைத்தார். பிறகு நினைத்தார்; பழய உவமானம் பயனில்லை புதிய உவமானம் தேடுவோம் என்று நெஞ்சில் குறித்தார். புதிய பரணி பாடினார். பாடிவிட்டுச் சொன்னார்:—"என் ஆட்சி விளக்குமாறு போன்றது. கட்டுக் குலையாத வரையில்தான் அதைக் கொண்டு வீடு கூட்டலாம். முடிச்சு அவிழ்ந்து போனால் துடைப்பக் குச்சிகள் சிதறிப் போய்விடுமே! இது தெரியாதா உங்களுக்கு, ஆகவே அரசாங்க 'முடிச்சை அவிழ்க்காதீர்கள்''

வீதி கூட்டும் வீராயிக்கும் வீட்டைப்பெருக்கும் விசாலாட்சிக்கும் கூட சென்னை மாகாண அரசியல் புரிய வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் தான் அன்பர் ஆச்சாரியார் விபரீதமான இந்த உதார [illegible]

ஆனால் வீராயிக்கும் விசாலாட் கும் அது புரியவில்லை; அவர் அதை "வேறு விதமாக" நினை துக் கொண்டனர்.

வீராயியும் விசாலாட்சியும் ம டுமல்ல, அன்னை ஆரிய ராணியி கை விலங்கை உடைத்தெறிய வ "தேசியத் தம்பிகள்" கூட அ தவறான பொருளில் எடுத் கொண்டனர். எங்கள் முதலமை சர் இந்த உருவமும் எடுக்கல சுதே என்று கண்கலங்கினர். எ உருவம் வேண்டுமானாலும் எ கட்டும் ஆச்சாரியார்—எங்க உவ னம் வேண்டுமானாலும் கூறட் ஆனால் இந்த உருவமும் உவம மும் மட்டும் வேண்டாம் என் அவருடைய பரிவாரம்.

அவர்கள் கலக்கம் கிடக்கட் அதைக் கவனிக்க அவருக்கு மேது? அவர்தான் போகுமிடம் கும் புற்றீசல் எனப் புறப் பொதுமக்களின் கிளர்ச்சி க சிந்தை நொந்து கிடந்தா சிந்தை நொந்து கிடந்தாரே த உவமானத்தைத் மறந்தாரில் இடிந்த சுவர் ஒன்றன்மீது நி வண்ணம் குண்டூரில் பேசுகை குறிப்பிட்டார் நான் ஒரு வக்கீ ஆகவே எனக்கு வாதாடத் யுமே தவிர நாடாளத் தெரி என்று. ஒரு நாட்டின் முதல சர் இப்படியும் சொல்லலா இது முறையல்லவே என்று ணினர் மக்கள். ஆனால் அவர் ணியது அதை அல்ல-அடுத்த மானம் என்ன சொல்லலாம் பதைத்தான்.

"கட்டாய இந்தி வந்தால் த கெட்டுப் போய்விடும் என்கி களே, இதில் நியாயம் லவலேச இல்லையே! வெறும் மோரைச் பிடாதீர்கள்; உப்பு போட்டுச் பிடுங்கள் என்கிறேன் நான். தவறு? தமிழ் மோர்போல! இ உப்புபோல! ஒன்றினால் ஒ எப்படிக் கெட்டுவிடும்? இரண் யும் கூட்டிக் கலந்து தாராளம சாப்பிடலாமே!"—இது றொரு நாள் அன்பர் ஆச்சாரி புகன்றது.

[illegible] 10-ம் பக்கம் பார்

ஆகஸ்டு 15!

[மணிவண்ணன்]

நான் ஒரு மருத்துவக் கல்லூரி
ணவன். தந்தை தெற்கே ஒரு
ிய மிராசுதார். ஊரில் உள்ள
கள் பங்களாவிலிருந்து பார்க்கும்
து கண்ணில் தெரியும் தோட்டங்
, பூ, காய், பழம் கொண்டு கண்
ப் பறிக்கும் செடி கொடி மரங்
, நீல வானின் கீழே கதிர் தாங்கி
குனிந்து நெற்பயிர் பொற்பாய்
த்தால் போலுள்ள நிலங்கள்,
மீதமர்ந்து காதல் பாட்டுப்
ம் பறவைகளுக்குக் கீழே
மா' என்றழைத்துத் தாய்
க்கி ஓடி பால் பருகும் கன்றுகள்,
வும் எங்களுடையனவே தந்தை
"தீவிர" தேசீயவாதி. "தனிமனி
சத்தியாக்கிரக" த்தில் சட்டம்
ஏ பிரிவில் மூன்று திங்கள்
றுங்காவல் பெற்ற ஆகஸ்ட்
ாகி. நல்ல பேச்சாளியும் கூட.
ணிகம் செய்யவந்த ஆங்கிலேயர்
ற்றுமை வித்தூன்றி நாடு பிடித்த
வஞ்சகங்கள் இந்தியருடைய தொ
திறமையை நசுக்குவதற்காக
கா தொழிலாளருடைய கைவிரலை
க்கிய கோரம் நாட்டைச் சுரண்ட
ழிப்பைச் சீரழித்த பெரும் பெரும்
ாசடிகள் இவற்றைப் பற்றி யெல்
ம் வீரமாக காரசாரமாகப் பேசும்
லமை வாய்ந்தவர். ஆண்டவ
டம் நிரம்ப பக்தியும் கொண்டவர்
ண்டவன் பூண பட்டாடை பொன்
ம், அவர் குடிக்க பால் அவருக்கு
க்கு ஏற்ற நெய், எண்ணெய்,
சவங்கள், இவை கவனிக்க குருக்
புரோகிதர்கள் அர்ச்சகர்கள்—
வைகளுக்கு நல்ல பண உதவி
யவர் ஆனால் தன்னிடம் உழைக்
ஏழைத் தொழிலாளிகளிடம்
டும் அந்த தர்மசிந்தை தலைகாட்டு
ல்லை. மிகவும் கண்டிப்பு.
ாடுத்த கடன்களை குறிப்பிட்ட
டிக்குத் திருப்பித் தந்தே தீர
ண்டும். குறைகள் பற்றியோ
ச்சுவிடக் கூடாது. பண்ணையாட்
அவர் முன்னால் அஞ்சி நடுங்க
ண்டும். உரத்த குரலில் பேசக்
ாது. தலை நிமிர்ந்து நிற்கக்
ாது. தப்பித் தவறிகூட "மே
ாரை"த் தாழ்த்திப் பேசுதல்
ாது. **இராமராஜ்ய வர்ணாஸ்ரமம்**
பழுக்கின்றி காப்பாற்றப் பட
வண்டும் என்பது அவருடைய
ந்த முடிபு. "ஏழை! கஷ்டப்
திருனா? பட்டுமே அவனுடைய
ன்மபலன் "அது! அது அதற்கு
[illegible]

தீரவேண்டும்" என்று அடிக்கடி பேசுவார். வாழ்க்கைத் துன்பங்கள் கடவுள் தந்தவை. அவற்றை அனுப வியாமல் அவற்றினின்றும் தப்பித் துக் கொள்ளப் பார்ப்பது கடவுளுக்கே துரோகம் செய்வதாகும் என்பது அவருடைய சித்தாந்தம். முறுக்கிவிட்ட மீசையும் நெற்றியில் திருநீறும் கம்பீரமான தோற்றமும் உடலில் கதர் சட்டையும் உள்ளத் தில் வைதீகமும் கொண்ட அவரைப் பார்த்தால் அந்த வட்டாரமே நடு நடுங்கிப் போய்விடும்.

இவர்தான் என் தகப்பனார்!

* * * *

மருத்துவ விடுதியில் நோயாளிகளைப் பார்வையிட்டபின் "ஸ்டெதாஸ்கோப்"கள் கழுத்தில் ஊசலாட, உல்லாச நடை நடந்து பல மாணவ மாணவிகள் உடன்வர நான் சவப் பரிசோதனை அறை நுழைந்தேன். அன்றைக்கு சவப் பரிசோதனை வகுப்பு எங்களுக்கு. சவம் சலவைக் கல் மேஜைமீது கிடத்தப்பட்டிருந் தது. பக்கத்தில் நோய் பற்றிய குறிப்புகள் கொண்ட தாள் மாட்டப் பட்டிருந்தது. அங்கு போய் படித் தேன்.

பெயர்: தெரியவில்லை.

வயது: சுமார் 45.

முகவரி: இல்லை.

தொழில்: அனாதை.

வரலாறு: சென்னை வழிநடைப் பாதையில் மயங்கிக் கிடந்த இவனைப் போலீசார் 4-8-47-ல் கொண்டுவந்து இவ் விடுதியில் சேர்த்தனர்.

சிகிச்சைகள்: 5—8—47-ல் 20 அவுன்ஸ் குருதி நரம்பு வழி உள் செலுத்தப்பட்டது. மயக்கம் தீர வில்லை. குளறுமொழிகள் ஏதோ கூறினான்.

6-8-47 காலையில் மரணம்.

எங்கள் பதில் எதிர் பார்க்காமலே பேராசிரியர் கேள்விகள் கேட்டுக் கொண்டே சவத்தை அறுக்க ஆரம் பித்தார். முகத்தைப் பார்த்தேன்— பேராசிரியர் முகத்தை அல்ல, சவத் தின் முகத்தை. பளிச்சென எங் கேயோ பார்த்த நினைவு பிறந்தது. ஆனால் எங்கே என்று தெரியவில்லை. எங்கே பார்த்தேனே? "அரியபவ[illegible]

னில் ஒரு ரூபாய்க்கு சிற்றுண்டி உண்டபின் கடையில் சிகரெட் கொளுத்தும்போது காலணா வேண்டி கை நீட்டுபவனா? கோடை வெயிலில் தியேட்டர் வெளியில் டிக்கட் வாங்க "க்யூ" வரிசையில் நிற்கும்போது தள்ளாடி நடுங்கிக் கை நீட்டுபவனா? தேங்காய் உடைத்து, தட்சிணை ஈந்து சூடம் கொளுத்தி வருகையில் கோயில் வெளியில் கை நீட்டியும் காலணா பெறாதவனா?.........யார் அவன்?............யாராய் இருக்க முடியும்? ....

ஆசிரியர் கூற மாணவத் தோழர்கள் தோழியர்கள் குறிப்புகளை வெகு விரைவாக எழுதுகின்றனர்:—

இருதயம்: மெலிந்து விரிந்து கிடக்கின்றது,

ஈரல்: பெருத்துக் கிடக்கின்றது. வெட்டுப் பரப்பு பசையுள்ளதாக இருக்கிறது......

......நீண்ட நாட்கள் உணவு இன்மை இரத்தமின்மை மரணத்துக்குக் காரணம்.........

சவப் பரிசோதனை முடிகின்றது. கால் கடுக்க நின்ற பசியுடன் கல்லூரிச் சிற்றுண்டியகம் போனேம்,

* * *

நினைவில் வருகின்றது. ஆம் கோடை விடுமுறையில் ஒருநாள் ஊரில் தந்தையுடன் தோட்டம் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தந்தையார் தம் திறமைகள், பணம் சேர்க்கும் வழிகள், கிராமத்து ஈசுவரனின் மகிமைகள் (இன்னும் என்னென்னவோ— தொழில் முறையில் வெற்றி பெறும் முதலாளி பேசுவன அவற்றை யெல்லாம்) அடுக் கடுக்காகச் சொல்லிவந்தார். நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே பக்கத்தில் புங்க மாத்துக் கருகில் ஏதோ பேச்சுக் குரல் மரம் வெட்டும் சத்தத்தோடு சத்தமாகக் கலந்து கேட்டது.

ஒருவன்: அண்ணே, போனவாரம் பக்கத்து கிராமத்திலே ஒரு கிழவர்— சாமியார்போல மீசையும் தாடியுமா இருக்கிறரு—ஆனா, சாமி பூதம் இல்லென்னு சொல்றரு— கூட்டம் போட்டு பேசியிருந்தாரு. பணக்காரு நம்ப கஷ்டங்களே பார்க்க மாட்டாங்க. ஆனுக்கா சாமிக்கு ரொம்ப செலவெல்லாம் பண்ணு வாங்க— இன்னும் ஏதேதோ பேசினரு; மீதி ஒண்ணும் புரியலே நம்ப கூலி ஒண்ணும் பத்தலே அவரு நல்லாதான் சொன்னரு......

இவை யெல்லாம் எங்கள் காதில் விழுந்தன. தந்தை முகம் சிவு பேறியது. தடியை வேகமாக[illegible]

நடந்து அங்குப் போய்ச் சேர்ந்தார்: நானும் பின்னால் ஓடினேன். அங்கே இருவர் மரம் வெட்டிக் கொண்டிருந்தனர். அப்பாவைப் பார்த்ததும் இருவரும் பயந்து மிரள மிரள விழித்தனர்.

தந்தை: அடெ தடிக் கழுதைங்களா! என் உப்பைத் தின்னு தின்னு ரொம்ப கொழுத்துப் பூட்டிங்க. சாமி பூதம் தேர் திருவிழா பணக்காரு பெரியவங்கன்னு மட்டு மரியாதை ஒண்ணுமில்லையா? கட்டை துளுத்துப் போச்சா. ஆகட்டும் சொல்றேன்......

ஒருவன்: ஐய்யய்ய சாமி நானு இல்லிங்க; இவன்தான் கன்னா பின்னான்னு பேசினான்: நானு மரியாதை இல்லாமெ இதெல்லாம் பேசாதெடா என்று சொல்லிக் கிட்டிருந்தேங்க. தந்தை: ஏதோ பொய் சொல்லித் தொலை. (மற்றவனைப் பார்த்து) டே, நீ கூலி வாங்கிண்டு இந்த ஊரை விட்டு ஓடிடு இல்லாட்டிக்கு எல்லாரையும் கெடுத்துடுவே. திரும்பி வந்தா காலை ஒடிச்சுடுவேன். இந்தா உன் கூலி நியாயத்துக்கு மேலேயே இரண்டு பங்கு கொடுத்திருக்கேன். ஓடு, நில்லாதே.

அவன் இரக்கமாகத் தான் எங்களைப் பார்த்தான். அப்பா முகத்தில் மாறுதலே இல்லை. நான் அவன் சார்பில் ஏதாவது கூறினால்,

"பட்டினம் போய் நீ ரொம்ப கெட்டு போய்ட்டே, ராமசாமி நாய்க்கன் கூட்டம் பெருத்துப் போச்சு, நீபடிச்சது போதும் இங்கெயே நின்னு நில புலன் பார்த்துக்கோ" என்று கண்டிப்பாகக் கூறியும் விடுவார், ஆகையால் நான் வாய் மூடியானேன். தந்தையின் கோபம் அறிந்த அவன் கோடரியைக் கீழே வைத்து விட்டு ஒன்றும் கூறாமல் மேலே நடந்தான். கூட இருந்தவன் உதடுகள் துடித்துக் கொண்டு இருந்தன. இதை நான் கவனித்தேன். தந்தை ஒன்றும் நடக்காதது போல் மேலே நடந்தார் நானும் பின் தொடர்ந்தேன்......... அன்று துரத்தப்பட்ட அதே கட்டை வெட்டிதான் எங்கெங்கோ அலைந்து திரிந்து சோற்றுக் கில்லாமல் திண்டாடித் தெரு வோரத்தில் மயங்கி வீழ்ந்திருக்கிறான்; மருத்துவச் சாலைக்குக் கொண்டு வரப்பட்டு பிணமும் ஆனான் என்பதை நினைக்க நினைக்க என் உள்ளமே வெடித்து விடும்போலிருந்தது. பழமையில் மோகம், பிறர் துன்பம் அறியா பணச் செருக்கு, அதிகாரப் பித்து கொண்ட எத்தனையோ பலிகளில் இது ஒன்று என்று என்வாய் என்னையறியாமல் முணுமுணுத்தது.

* * *

என்ன பிரதர்! பொட்டியிருக்கா? சிகரெட் இருக்கா? எடுங்கொ! சரி தாங்க்ஸ் இருங்கொ உங்கள்தையும் கொளுத்றேன் என்று தோழர் ஒருவர் சிகரெட் கொளுத்தி விட்டார். பியூன் என் பேர்க்கு வந்த தந்தியை என்னிடம் கொடுத்தான். என்னதோ ஏதோஎன்று வேகமாகப் பிரித்தேன்.

"சுதந்திரத் திருநாள் கொண்டாடப் போகிறேன். 12'+8' தேசியக் கொடிகள் பத்தும் 3''+1½ 'கொடிகள் ஆயிரமும் வாங்கிக் கொண்டுவா இங்கு நான்கு நாள் தங்கவேண்டும்.' தந்தியை (தந்தை) மேஜைமேல் வீசியெறிந்தேன். நண்பர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு படித்துப் பார்த்தனர்.

அவனுக் கென்னப்பா பணக்காரன். ஊருக்குப் போய் குஷியாய் "இண்டிபெண்டன்ட்ஸ் டே" செலிபிரேட் பண்ணப் போறான்" என்றான் ஒருவன். நானோ, சுதந்திரம். சுயராஜ்யம் யாருக்கு? பணக்காரனுக்கா? ஏழைக்கா? ஏழை யென்றும் அடிமைதானா? அவன் நிலை மாறாதா? சீமான் வீட்டு இரும்புப் பெட்டியில் முடங்கிக் கிடக்கும் செல்வத்தோடு செல்வம் மேலும் மேலும் சேர்க்கப் படுவதுதான் சுதந்தரமா? விடுதலை விழாவாமே விடுதலை விழா! விடுதலை யாருக்கு" என்று எண்ணி, சிகரெட் முனையிலிருந்து வளைந்து வளைந்து போகும் புகை நோக்கி சாய்ந்து கொண்டிருந்தேன்.

ஆச்சாரியார் வியாக்கியானம்

(8-ஆம் பக்கத்தொடர்ச்சி)

"உப்பில்லாமல் மோரைக் குடிக்கலாம், தப்பில்லை, உடலுக்கும் கேடில்லை. ஆனால் மோரில்லாமல் உப்பைத் தின்ப தெப்படி? தமிழே படிக்காத எங்களுக்கு இந்தி எதற்கு?"—இது மக்கள் வாதம்.

"அடடே அப்படியே சங்கதி! அந்த உதாரணம் வேண்டாம்! அவசரத்தில் சொல்லி விட்டேன். தமிழ் வேஷ்டியாக்கும், இந்தி 'ஷர்ட்' டாக்கும். வேஷ்டி கட்டிக்க வேண்டும்தான். அதற்காக ஷர்ட் வேண்டாம்னு பிடிவாதம் பிடிப்பாம்னன்? வேஷ்டி மாத்திரம் கட்டிக்கினு பட்டணவாசம் போனா சுத்த கர்னாடகம் போலிருக்கு, சொக்கா கூட இல்லேன்னு தூஷிக்கமாட்டாங்களா? அதுக்குத்தான் ஷர்ட் போட்டுக்கங்கோ என்
கிறேன் நான். இந்தி சட்
போட்டுக்கோங்களேன்
லென்ன தப்பு?"—ஆச்சாரியா
புனராலோசனை இவ்விதம்!
"தப்பில்லை! தாராளம
போட்டுக் கொள்ளலாம். ஆ
அரையில் ஆடையே இல்லா
சட்டை மட்டும் அணிந்து கொ
நடமாடினால், காண்பவர்
கொட்டிச் சிரியாரோ!" என்ற
தமிழர் இந்த தமிழ்நாட்டிலே
றக்குப் பத்துபேர் தானே த
அறிந்தவர்கள்—ஆச்சாரிய
மொழியிலே சொல்வதா
வேஷ்டி கட்டிக் கொண்டவர்
மற்ற தொண்ணூறு பேருக்
தான் வேஷ்டியே இல்லையே, அ
களுடைய முதல் தேவை வே
தானே! அதை விட்டுவிட்டு ஆ
கொரு சட்டைமட்டும் மா
விட்டு 'வட்டி கட்டா மனித
நீ தெருவில் கட்டாயம் நட
தான் ஆகவேண்டும், என்று ஒரு
சொன்னால் யார்தான் சிரிக்க ம
டார்கள்!
ஆச்சாரியாருடைய உவமா
களைக் கேட்டுக் கேட்டுத் தமி
செவி அலுத்து விட்டது. தம
விரும்பியது உவமானங்களை அ
தங்கள் வேதனைக்கு மருந்து. அ
களுடைய கிளர்ச்சியோ மனே
னையின் விளைவு மனவேதனை
வேண்டுமானால் அதற்கு வித்
றிய கட்டாய இந்தி தொலைய
டும். அதைத் தொலைக்க வி
அமைச்சர். அவர் சிறுகதை ம
படித்துக் கொண்டிருந்தார்.
வேதனையை மேலும் வளர்க்கிற
என்று தவித்தனர் தமிழ்நாட்ட
எங்கள் சத்தம் தங்கள் செவி
வில்லையே. காரணம் என்னவே
என்று அவரையே கேட்ட
எனக்குத்தான் ஒரு காது கேள
என்றார் அவர். வேடிக்கைக்கு
மில்லை—எங்கள் இதயக் கு
லுக்கு மருந்து வேண்டும் எ
னர் மக்கள். வேடிக்கை அ
எனக்கு உண்மையிலேயே
காது கேளாது என்று வி
சொன்னார் அவர். விடவில்லை
கள். கேட்கும் காதை எங்கள்
கம் திருப்பலாகாதா என்றனர்.
கள் எங்கே இருக்கிறீர்கள் என

ங்குத் தெரியவில்லை—நாமே
புக் கண்ணாடிக்காரன் என்
ஆச்சாரியார். கழற்றி விடுமே
த என்றனர் மக்கள்.
ரக்குவாதம் வளர்ந்தது. அது
வளரக் கோபமும் வளர்ந்
அமைச்சருக்கு. கோபம்,
கிப்பான வார்த்தைகளை
த்தது. "நள்ளிரவில் திடீரென
டில் களவாட வந்தவன் செயல்
ல் இருக்கிறது உங்கள் எதிர்
நானும் சொல்லிச் சொல்லிப்
கிறேன்; நீங்கள் கேட்கிறவழி
இல்லை. இனி கையில்
த்ததை எடுத்து அடிக்கத்
போகிறேன், வேறென்ன
வது" என்னும் இந்த வாச
ள் ஆச்சாரியார் பேச்சிடைப்
தன. தமிழ் வீரர் கூட்டம்
ன் பொருளை உணர்ந்துகொண்
அடக்குமுறை வருகிறது
வதைச் சொல்லாமல் சொல்லி
ஆசசாரியார். அதுகேட்டு
சவில்லை தமிழகம். அடக்கு
றதானே! வரட்டுமே! வந்தால்
ன? எங்கள் உணர்ச்சி மங்
ா-தமிழர் வீரம் மறையுமோ
ு துந்துபி முழங்கினர்
ர். எங்கள் உடல் பொருள்
எல்லாம் இன்பத் தமிழ்
ழிக்கே தருவோம்—பங்கம்
த்திடில் தாய் மொழிக்கே
பச்சைரத்தம் பரிமாறிடு
ம் என்னும் வீரமொழியை
துக் காட்டினர். சிறைச்சாலை
மிழரை அழைத்தது. களிப்
ந்து பாடியவண்ணம் ஆயிரவர்
றனர். காளையர் மட்டுமா,
ல - கன்னியரும் சென்றனர்.
ண்டர்கள் மட்டுமா -
டயாது, தலைவரும்
றார். தளபதிகளும் சேனு
ர்களும் வீராங்கனைகளும்
திரளாய்க் கூடினர்.
கொண்டெழுந்த தமிழர்
போர் விளைத்தனர். ஈரோட்
சறையில் ஈண்டினர் கூட்டங்
மாக. போர் நடந்தது. இன்
தமிழ் காக்க இளந்தமிழர்
கடும்போர் புரிந்தனர். கையில்
கிடைத்ததை எடுத்து அடிப்பேன்
என்றார் 'கண்ணன் காட்டிய வழி'
யார். அவர் கையில் கிடைத்தது
124A என்பது தமிழருக்குத் தெரி
யும். துப்பாக்கி வேட்டுக்கே அஞ்
சாத தமிழர் இனம் 124A கண்டா
அஞ்சி ஒதுங்கும்? அதிலும் உயி
ரனைய தமிழுக்கு ஆபத்து என்
றறிந்த பின்னரா ஒதுங்கி ஒடுங்
கும். இல்லை இல்லை. தூங்கிக்
கிடந்த தமிழர் கூட்டம் எழுந்தது.
எழுந்து மடமடவென முறித்துத்
தள்ளிற்று எதிர்ப்புச் சக்திகளை.
போராட்டம் தொடர்ந்தது.
தொடர்ந்தது என்றால் ஒரு நாள்
அல்ல இருநாள் அல்ல, இரண்டு
ஆண்டுகள்! முடிவைப்பற்றி ஐயமா
உங்களுக்கு? இறுதியில் வென்றது
தமிழன்தான்! தமிழன் வெற்றி
பெறவில்லை எனில் வெற்றி என்ப
தற்குத்தான் என்ன பொருள்?

வெற்றி மாளிகையில் தமிழன்
வில்-புலி-கயல் பொறித்த கொடி
யேற்றிய காலை ஆச்சாரியார், "புற்றி
லிருந்து ஈசல் கிளம்புவதுபோல
வாலிபர் கூட்டம் மேலும் மேலும்
வருகிறதே! இந்திச் சனியனுக்கு
இவ்வளவு எதிர்ப்பு இருக்கும்
என்று தெரிந்திருந்தால் அதை
வைத்தே இருக்க மாட்டேனே"
என்றுரைத்தார் சோகம் கலந்த குர
லில். ஆள்வது நானு அல்லது
எனது நண்பர் ஈரோடு இராமசாமி
நாயக்கரா என்பதைத்தான் ஒரு
கை பார்த்துவிட வேண்டும் என்று
முன்னொருநாள் சொன்னதும்
இதே ஆச்சாரியார்தான். அந்தக்
குரலுக்கும் இதற்கும் எத்தனை
வேற்றுமை. புற்றிலிருந்து கிளம்
பும் ஈசல்! அத்தகைய தமிழர் கூட்
டம்! அதை எதிர்க்க முடியாது!
அருமையான உவமானம்—அழ
கான கருத்து! இந்த உவமானத்
தை விட்டுவிட்டு ஏனோ அவர் இத்
துணை நாள் வேறு வேறு உவமை
அலங்காரங்களைத் தேடி அலைந்தார்!
நீர்மோரிலிருந்து விளக்குமாறு
வரையில், கண்ணாடிக் கடையி
லிருந்து பக்கவாதம் வரையில்,
ஆடை அணியிலிருந்து புதுமாட்டுப்
பெண் வரையில் எத்தனை உவமா
னங்களைக் கையாண்டார் இதற்கு
முன்? அந்த எடுத்துக்காட்டுகள்
எரியும் கொள்ளியை ஏறத் தள்ளத்
தான் பயன் பட்டனவே தவிர
பொங்கி எழுந்த எதிர்ப்பை அட
க்கிவிட வில்லையே. ஆம்! புற்றீச
லெனத் தமிழர் கூட்டம்! அது
தான் சரியான உதாரணம். ஆனால்
அதை உணர ஆச்சாரியார் தால
முத்து நடராசன் என்னும் இரண்டு
மரணப் படுக்கைகளைத் தாண்டி
யன்றோ வரவேண்டி இருந்தது.
நடராசன் தால்முத்து என்பன
வெறும் உவமானங்களா ஆச்சாரி
யாருடைய பல உவமானங்களை
மறந்து விட்டதுபோல் அவற்றை
யும் மறந்து விடுவோம்—மன
அமைதி பெறுவோம் என்பதற்கு!
அல்ல! தாலமுத்து நடராசன் என்
னும் இரு சொற்களும் உவமானங்
கள் அல்ல! உவமேயங்கள் அல்ல!
குட்டிக் கதைகளும் அல்ல! தமிழ
ருடைய இருதய கீதம்! உணர்ச்
சியை உள்ளத்தைத் தொட்டிழுக்
கும் இனிய நாதம்! வருங்காலத்
தமிழகம் என்னும் புது மாளிகை
யை எழுப்புதற்குத் தங்களுடைய
அரிய உயிரை அர்ப்பணித்த கட்டி
ளங் காளையர் இருவருடைய
நினைவை எழுப்பும் வீரஒலி. அந்த
இருதய கீதத்தை—இன்ப நாதத்
தை—வீர ஒலியைத் தமிழகம் என்
றும் மறவாது. அதேபோல, அந்த
வீர ஒலி எழுவதற்கு அடிப்படைக்
காரணமாய் இருந்த அமைச்சர்
ஆச்சாரியாரின் கிண்டல் மொழி
களையும் கேலிச் சித்திரங்களையும்
குட்டிக் கதைகளையும் விபரீத
வியாக்யானங்களையும் தமிழரால்
மறக்க முடியாது.

தமிழரால் மறக்க முடியாது.
ஆனால் ஆச்சாரியார் மறந்துவிட்
டார். மறந்துவிட்டாரோ இல்லையோ
மறந்ததாகப் பாவனை செய்துகொ
ண்டார். இந்தி எதிர்ப்புப் போர்
முடியக்கூட இல்லை அதற்குள் ஓர்

நான், ஆச்சாரியார், பெரியார் மாளிகைக்கே வந்தார் அவரைக் காண. சிறையில் இட்டோமே, அவர் உடல் சிதைந்து விட்டிருக்குமோ என்பதைக் கண்டு வருத்தந் தெரிவிக்க வந்தார் போலும் என்று நீங்கள் நினைப்பீர்கள். உண்மை அதுவல்ல தோழர்களே! தன்னுடைய ஆப்த நண்பரைக் கண்டு குசலம் விசாரித்துச் செல்லத்தான் அவர் வந்தார்.

அவருக்குச் சரிகை மாலை போட்டுவிட்டு, வரவேற்புரை சொல்லிவிட்டு, உடல் நலம்தானே என்று உபசாரமொழி பேசிவிட்டு பெரியார் சொன்னார்:-நான் மோர் தான் சாப்பிடுவது வழக்கம்.... நீங்கள்.....

ஆச்சாரியார்: சாப்பிடுவேன்! பேஷா சாப்பிடுவேன்! மோர் சாமான்யமில்லே நாயக்கர்வாள்! தேக ஆரோக்கியத்திற்கு ரொம்ப சிலாக்யமானது!

அப்படியா என்று கேட்டவண்ணம் பெரியார் மோர் கொடுத்தார். ஆச்சாரியார் சாப்பிட்டார். கொடுத்தவர் மாஜி கைதி. சாப்பிட்டவர் அவரைச் சிறையிட்ட முதலமைச்சர்.

விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குப் போனதும் கடிதம் எழுதினார் ஆச்சாரியார்.

"பிரியமுள்ள நாயக்கர் அவர்களுக்கு, தங்களைச் சந்தித்த பிறகு இவ்வளவு நாள் நம் இடையே இருந்து வந்த "மலை" மறைந்தே போய் விட்டது; நமஸ்காரம்."

இராசகோபாலாச்சாரி.

திருப்பித் திருப்பிப் படித்தார், படித்துவிட்டுப் பதில் எழுதினார் பெரியார்:

அன்புள்ள ஆச்சாரியார் அவர்களுக்கு, கடிதம் கிடைத்தது. மிக மகிழ்ச்சி ஆனால் ஒரே ஒரு சந்தேகம். நம்மிடையே இதுவரை ஏதோ "மலை" இருந்ததாகவும் நம்முடைய சந்திப்புக்குப் பிறகு அது மறைந்துவிட்டதாகவும் எழுதி இருக்கிறீர்களே அதுதான் எனக்குப் புரியவில்லை. நான் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். நம்மிடையே எப்போதுமே மலை இருந்ததாகத் தெரியவில்லையே.

தங்கள் அன்பன்,
ஈ. வெ. ராமசாமி.

இருவர்க்கும் இடையே "மலை" இருந்தது உண்மையோ இல்லையோ, அது எப்படி இருந்தாலும் பெரியாரின் பெருந்தன்மையும் அதைவிட முக்கியமாக வைரத்தை வைரத்தால்தான் வெட்டவேண்டும் சாணக்யத்தை சாணக்யத்தாலேயே வெல்லவேண்டும் என்ற உண்மையும் இந்த நிகழ்ச்சிகளிலிருந்து வெள்ளிடை மலையென விளங்குகிறது.

"எல்லாம் சரி, சாக்ரடீஸ்! திடீரென்று இந்தப் பழய சம்பவங்களை இப்போது ஏனப்பா நினைத்துக்கொண்டாய்" என்று நீங்கள் கொஞ்ச நேரமாகவே கேட்டுக் கொண்டிருப்பது என் காதில் விழாமல் இல்லை.

10-5-47-ல் திருச்சியில் பேசுகையில் மாஜி பிரதமர் ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் குட்டிக்கதையொன்று கூறி இருந்தார். சென்னை மாகாணத்து அரசியல் சிக்கலைச் சுருங்கக் கூறி விளங்க வைப்பதற்குத் தான் அவர் அதைக் குறிப்பிட்டிருக்கிறார். பத்திரிகையில் அதைப் பார்த்தேன். என் நெஞ்சு எங்கெங்கோ பறந்து சென்றது. என் மனம்போன போக்கைத் தான் உங்களுக்கு மேலே படம் பிடித்துக் காட்டி யுள்ளேன்.

எனக்குப் பழமையை நினைப்பூட்டிய அந்த வாசகம் இது:—

முன்னால் இருந்த மந்திரி சபை என்ற மாடு சரியாகப் பொதி சுமக்காததால், அதைச் சந்தையில் விற்று விட்டு என் நண்பர் ஓமாந்தூர் ராமசாமி ரெட்டியார் புதிய மந்திரி சபை என்ற மாட்டை வாங்கி வந்திருக்கிறார். இதுவும் சுமக்க மாட்டேன் என்று ஓடப் பார்க்கிறது. அதற்குத்தான் இந்த மாட்டிற்கு மூக்கணாங்கயிறு குத்தி அதைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறார் காமராஜ் நாடார்!

எப்படி இருக்கிறது ஆச்சாரி[யாரின்] வியாக்யானம்! இதாலிய ஞா[னி] மார்க்க அரேலியரின் தத்துவத்[தில்] தோய்ந்த நெஞ்சினர் அல்லவா! அ[வ]ருக்குத் தெரியாத வியாக்யான[ம்] உங்களுக்கும் எனக்கும் தெரி[யப்] போகிறது! தெரிந்தாலும் ந[ம்மால்] என்ன ரசிகமணி டி. கே. சி. ய[ா] ஆச்சாரியார் வியாக்யானத்திற்[கு] விளக்கவுரை சொல்ல!

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதை காங்கிரஸ்காரரும் ஆரியர்—பனியாக்கள் அடிமைகளும் திருத்திக் கூறி 'வெள்ளையனை வெளியேற்றுவது திராவிட கழகத்தாருக்கு இஷ்டமில்லை,' என்று விஷமப் பிரசாரம் செய்வார்களாகில், அது காங்கிரசாரின் மற்றொரு பித்தலாட்டப் பிரசாரம் என்று திராவிட மக்கள் கருத வேண்டுமேயொழிய ஏமாந்துபோகக் கூடாதென்று வேண்டிக்கொள்கிறேன்.

இரண்டில் எது சரி?

ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியதும், இங்குள்ள எல்லா சிக்கல்களும் தாமாகவே அறுபட்டுப் போய்விடும்.

காந்தியார்.

ஆங்கிலேயர்கள் வெளியேறி விட்டால் நம் பிரச்னைகள் அவ்வளவும் தீர்ந்துபோய்விடும் என்று சொல்வது தவறு; அது எப்படித் தீர்ந்துவிடும்?

சர்தார் படேல்.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons.)